செ. கு. எண்:303 நாள் :17.11.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 17.11.2013

தமிழ்நாட்டில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக, 18.10.2013 அன்று விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகையா என்பவரின் மகன் பாலசுப்பிரமணியன்;

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி உள்வட்டம், புஞ்சைலக்காபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சீரங்கன் என்பவரின் மகன் சத்தி;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கோதநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பிரான்சிஸ் என்பவரின் மகன் பெர்க்மான்ஸ்;

19.10.2013 அன்று திருநெல்வேலி மாவட்டம், மானூர் குறுவட்டம், எட்டான்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சீவலப்பேரியான் என்பவரின் மனைவி திருமதி மரியம்மாள்;

வாகைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கருத்தப்பாண்டி என்பவரின் மகன் துரைப்பாண்டி, திரு. செல்லக்கண்ணு என்பவரின் மகன் லெட்சுமணன்;

20.10.2013 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பௌந்தகரணை கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வராஜ் என்பவரின் மகன் அன்பு;

செய்யூர் வட்டம், பூங்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணிகண்டன் என்கிற டேவிட் என்பவரின் மனைவி திருமதி பூஜா;

--ஆகியோர் இடி, மின்னல் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

23.10.2013 அன்று வீட்டின் அருகே அறுந்த கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் திருவள்ளூர் மாவட்டம், போத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சித்திரை என்பவரின் மகன் கேசவன் மயக்கமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9